UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
4-6-1986
PERIODICAL DIVISION
LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 21 றம்ழான் 25 இதழ் 113

யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-6-1986

இனப்பிரச்னை குறித்து

## விரைவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மகாநாடு

– ஜனாதிபதி அறிவிப்பு

[கொழும்பு]

இனப்பிரச்சனைகுறித்து அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய மகாநாடு ஒன்றினை வெகு விரைவில் நடாத்தத் தாம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அரசபாராளுமன்றக்குழுக் கூட்டத்தில்கலந்து கொண்டு பேசும் போதேஜனாதிபதிஇத்தகவலைத் தெரிவித்தார்.

இனப்பிரச்னைத் தீர்வுக்கு சகலகட்சிகளும் இணைந்து ஒருமித்த தீர்மானம் ஒன்றினை எடுப்பதே இம் மாநாட்டின் நோக்கம் என்றுகூறிய ஜனாதிபதி, இலங்கை மக்கள் கட்சியின் வேண்டுகோளுக்கிணங்கவே இம் மாநாடு நடத்தப் படுவதாகவும் கூறினர்.

அரசியல் தீர்வு, இராணுவத் தீர்வு ஆகிய இருவழிமுறைக

(5ம் பக்கம் பார்க்க)

திருமலை உப்புவெளி

# ஆயுர்வேதசிகிச்சைநிலையத்தில் 10 பேர் கொலை!

(திருகோணமலையிலிருந்து நமது நிருபர்)

**திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த உப்புவெளிப்பகுதியில் ஆயுதப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருசிறுமியும், இருபெண்களும் உட்பட பத்து தமிழர்கள் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் உப்புவெளியில் ஆயுர்வேத சிகிச்சை நிலையத் திறப்புவிழா வொன்றிலேயே இப்படுகொலைச்சம்பவம் இடம் பெற்றது.**

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப்புவெளிப்பகுதி உப அலுவலக ஆயுர்வேத வைத்தியசாலைதிறப்புவிழா நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்தது.

இவ்விழாவிற்கு அபிவிருத்திச்சபை உபஅலுவலக உத்தியோகத்தர்களுடன் புதிய வைத்தியசாலையில் முதலசிகிச்சைபெறவந்தவர்களில் பத்துப் பேரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

நேற்றுப் பிற்பகல் இந்த வைத்தியசாலைக்கு வந்த ஆயு

(5ம் பக்கம் பார்க்க)

இலங்கை விவகாரம்:

## ஒருமித்த உடன்பாட்டுக்கு இ. காங்கிரஸ் தீர்மானம்

[புதுடில்லி]

இலங்கைத் தமிழர் பிரச்னையில் அனைத்து இந்தியரும் ஒருமித்த நிலைப்பாட்டினைக் கொள்ளவேண்டும் எனக் கோரும் தீர்மானமொன்று இந்திரா காங்கிரஸ் கட்சியினால் நிறைவேற்றப்பட்டுள்ளது

கடந்த திங்கட்கிழமை இக் கட்சியின் கூட்டம் புதுடில்லியில் கூடியபோதே இத் தீர்மானமெடுக்கப்பட்டது.

இதனிடையேதற்போது இந்தியா வந்துள்ள இலங்கைக்கான இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற், கடந்த திங்கட் கிழமையன்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்ததாகத் தெரியவருகிறது.

இலங்கையில் தற்போதுள்ள நிலைபற்றி இச் சந்திப்பின் போது திரு டிக்ஸிற், ராஜீவிடம் விளக்கிக் கூறியதாகத் தெரியவருகிறது. [ய-செ]

இளைஞர் எதிர்ப்பையடுத்து

## நாவற்குழி இராணுவம் ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நீண்டநாட்களுக்குப் பின் நேற்று அரியாலை நோக்கி கண்டிவீதியால் கால்நடையாக வந்தனர்.

இந்த இராணுவத்தினரை இளைஞர்கள் எதிர்த்து தாக்குதல் நடத்தினர் இளைஞர்களின் தாக்குதலைத் தொடர்ந்து முகாமுக்கு திரும்பிய இராணுவத்தினர் அங்கிருந்து ஷெல் தாக்குதல் நடத்தினர் இதனால் யேசப் - இராஜன் (வயது 25) என்பவர் காயமடைந்தர். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிசகப்பட்டுள்ளார்.

அரியாலையில் உள்ள வீடு ஒன்றின் கூரைசீற்றுக்கள் சேதமடைந்துள்ளன.

இச்சம்பவத்தின் போது நாவற்குழி பகுதியில் உள்ள தொழிற்சாலையில் கடமை புரியும ஊழியர்கள் சிலர் இராணுவத்தினரால் தடுத்து வைககப்பட்டிருந்தனர்,

சுமார் 1 மணிநேரம்நடந்த துப்பாக்கி சூடுகளின் பின் நாவற்குழி கண்டிவீதியின் இருமருங்கும் உள்ள பற்றைகள் தீயிடடு கொளுத்தப்பட்டு வெளியாக்கப்பட்டதாகவும் தெரிகிறது. [ஐ

## ‘ஹிஜ்ரா’ ரயிலில் பெண் உட்பட மூவர் படுகொலை!

[அலுவலக நிருபர்)

மட்டக்களப்பிலிருந்து நேற்றுக்காலை கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ‘ஹிஜ்ரா’ என்றபிரயாணிகள் ரயிலில் ஏறிய காடையர்கள் ரயில் பெட்டியிலிருந்த பிரயாணிகளை பயங்கர ஆயுதங்களால் தாக்கியதில் ஒரு முஸ்லிம் பெண் உட்பட மூறு தமிழர்கள் பலியானுர்கள். ஒரு சிங் ளவரும் மற்றும் பலரும் படுகாயமடைந்தனர்.

மழுகஸ்வெவ ரயில் நிலையத்துக்கும் கெக்கிராவ ரயில் நிலையத்துக்கும் இடையில் இப் பயங்கர சம்பவம் இடம்பெற்றது

மழுகஸ்வெவ ரயில் நிலையத்

(-5ம் பக்கம் பார்க்க)

## போராளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ மாணவர் பேரவை", ஆனி 5ந் திகதி வியாழக்கிழமை போராளிகள் தினத்தை அனுஷ்டிக்கும் என அறிவித்துள்ளது.

உரும்பராய் சிவகுமாரன் சிலையடியில் போராளிகள் தின நிகழ்ச்சிகள் ஆரம்பித்து யாழ். பரியோவான் கல்லூரியில் முடிவடையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இனப்பிரச்னை

## பேச்சுவார்த்தை மூலமான தீர்வே சிறந்தது!

### அமெரிக்க தூதரக அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தவும் இனப்பிரச்னைக்கு தீர்வு காணவும் பேச்சுவார்த்தைகள் மூலம் நடவடிக்கை எடுப்பதே சிறந்ததென அமெரிக்கா கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய நலன் கருதி இந்தியா மத்தியஸ்தம் வகித்து இலங்கைப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வொன்று காண்பதே நலமென அமெரிக்கா நம்புகின்றது என்று இந்திய அறிக்கையில் கூறப்பட்டவற்றை அமெரிக்கத்தூதரகம் மறுத்து வெளியிட்ட அறிக்கை ஒன்றிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்தியா ஆக்க பூர்வமான ராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்கலாமென அமெரிக்கா நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையான இந்த பிரச்னைக்கு இலங்கையிலிருந்துதான் தீர்வொன்று வரவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

போக்குவரத்துச் சீர்கேடு

## தீவுப்பகுதி பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன!

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலுள்ள 62 பாடசாலைகளும் உடனடியாக மூடப்பட்டுள்ளதாக யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பாடசாலைகளி யாவும் இம்மாதம் 16ந்திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணைக் கல்வி வட்டாரத்திலுள்ள 34 பாடசாலைகளும், புங்குடுதீவு கல்வி வட்டாரத் கொத்தணிப் பாடசாலைகளாகவுள்ள 28 பாடசாலைகளுமே மூடப்பட்டுள்ளவையாகும்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆசிரியர்கள் குழு நேற்றுக்காலை கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து போக்குவரத்து வசதியின்மையை எடுத்துக்கூறியதையதைத்தொடர்ந்தே மேற்படி பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தீவுப்பகுதிக்கான போக்குவரத்து சென்ற மாதம் 19ம்

[5ம் பக்கம் பார்க்க]

## அறிவித்தல்

தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் பேரில் எவருக்காவது பணம் வசூலிக்க அனுமதி வழங்கப்படவில்லை என்பதை இத்தால் அறியத்தருகின்றோம். அத்துடன் எனது பெயரைச் சொல்லியோ, அல்லது எனது உறவினரென்று கூறியோ ஏதாவது பண உதவி கேட்டாலும் எவருக்கும் அப்படியான உதவியை நிராகரிக்கும் படியும் அறியத்தருகிறேன். சில இடங்களில் இத்தகைய மோசடி நடப்பதாக அம்பாள் அடியார்கள் எமக்கு முறைப்பாடு செய்துள்ளனர். தாங்கள் விரும்பினால் அன்பளிப்பை கோயில் முகவரிக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

தங்கம்மா அப்பாக்குட்டி J. P.

தலைவர்,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

(C-2606)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எட்டு [8]போத்தல் பால் தரக்கூடிய ஜேசி கலப்பு இனப் பசு விற்பனைக்குண்டு. கன்று ஈன்று ஐம்பது நாட்கள். தொடர்பு: திருமதி ச. தியாகராசா, சாஸ்வதி இல்லம், சுளிபுரம் கிழக்கு, சுளிபுரம். C-2644

பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C2589)

பாவித்த நல்ல நிலையிலுள்ள நெஷனல் வீடியோ டெக் 340 (V. H. F.) விற்பனைக்குண்டு. தொடர்பு: வீடியோ வசந், புத்தூர். C 2661

புதிய குளிர் சாதனப்பெட்டி (Electrolux) Frost Free Double Door உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 18/4, கலட்டி வீதி, பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். (C 2683)

புத்தூர் மழவராயர் பழைய வீட்டிற்கு கிழக்குப் பகுதி எல்லைப்புறமாக இருக்கும் 8 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. முன்பகுதியாக கிணற்றுடன் 2 பரப்பு முதலில் விற்கப்படும். முழுமையாகவும் பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: S. பரமேஸ்வரி, மே/பா T. மயில்வாகனம், 189 கண்டி ரோட், மாம்பழம் சந்தியடி, அரியாலை. (C 2677)

கொக்குவில் கே. கே. எஸ். ரோட்டில் பார்மஸிக்கு அருகாமையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கங்காதரன், கே. கே. எஸ். ரோட், கொக்குவில் மேற்கு. (C 2687)

### தவறிவிட்டது

2-5 காலை வண்ணார் பண்ணை சிவப்பிரகாசம் வீதிக்கும், ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தடிக்குமிடையில் எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். V. S. கந்தசாமி, ஆறுகால்மடம், பழம் ரோட், ஆனைக்கோட்டை. (C 2685)

### தேவை

கோழிப் பண்ணையிலும், கடையிலும் பணி புரிவதற்கு 13 வயதிற்குட்பட்ட பையன்கள் தேவை. இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும்: சற்குணராஜா அன்பிறதர்ஸ், 660, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C- 2671)

பெண் காசாளர் தேவை, அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. நிர்வாகி, ஸ்ருடியோ நித்ய-சித்ரா, சங்கானை. (C 2686)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வன் தருமலிங்கம் ஞானசேகரன் (சேகர்)**

தோற்றம்: 1-4-1956
மறைவு: 1-6-1985

அன்பின் உருவமாய் அமைதிக்கிருப்பிடமாய் எம்முள்ளம் நிறைந்த உத்தமனாய் நின்று நலம் தந்த சேகரனே, குன்றாக் குலவிளக்கே, குமுறும் துயர் வெள்ளத்தெம்மை அழுந்தவிட்டுக் கூடுவிட்டுச் சென்ற குறிப்பறியோம். இறைவனுக்கினியவனாய் எங்கு நீ வாழ்ந்தாலும் உன் இனிய எழிலுருவும் அருள்சேர் திருமுகமும் என்றும் எம் உள்ளம் மறவாதிருக்கின்றோம். உன்னைப் பிரிந்து துயரமுறும்:

தாய், தந்தை, சகோதர, சகோதரி, உற்றார், உறவினர், நண்பர்.

புங்குடுதீவு-3. (C 2665)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



பொலிஸ் சார்ஜன்
அமரர்
**சுந்தரம்பிள்ளை துரைராசா**

(22-1-1937 —24-4-1986)

கடமைவீரனாய்க் கடைசி வரை பணியாற்றி அகால மரணமடைந்த எங்கள் அன்புத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியும் அன்புக் காணிக்கையாய்ப் பற்பல உதவிகள்புரிந்தும் எமக்கு ஆறுதல் அளிக்க முனைந்த அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம். எமது அன்புத் தலைவரின் ஆத்ம சாந்திக்காக 06-06-86 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்பர்களையும் உற்றார் உறவினரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள்.
70, ஜெயந்திநகர், கிளிநொச்சி. (C 2680)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## பம்பாய் வெண்காய விதை

அராலி பம்பாய் வெண்காய உற்பத்தியாளர் சங்கத்தின் முயற்சியால் இறக்குமதி செய்யப்பட்ட விதை, விவசாய அதிகாரிகளால் உத்தரவாதம் செய்யப்பட்டது. விஞ்ஞான முறைப்படி களஞ்சியப்படுத்தப்பட்டது. வெளிவந்த பயிர் திறமையாகவுள்ளது. சிறிய அளவு விதை கையிருப்பிலுள்ளது.

பெறுமிடம்:

ஸ்ரீ மகள் ரேடர்ஸ்
158, ஆஸ்பத்திரி வீதி,
[பெரியகடை]
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23572 [C2641]

## தேவை

தரமான கொப்பரு கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்:

மல்ரி ஒயில்
K.K.S ரோட்,
இணுவில்.

தொலைபேசி: 339 (சுன்னாகம்) [C 2643]

## விசேட அறிவித்தல்

கீழ்க் குறிப்பிட்ட எமது ஸ்தாபனங்கள் இரண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

புதிய விலாசம்:

**Office Equipment Ltd.**
**Kalamazoo Systems Ltd.**
No. 45, Pirappankulam Road,
Off K. K S Road, Jaffna.

மனோகரா சந்தியிலிருந்து 100 யார் தூரத்திலுள்ளது. (C2600)

## விக்னு

டியூசன் சென்ரர்
52,ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.]

**O/L** புதிய இறுதி பிரிவு 8
ஆரம்பம்: 9—6—86

DAY CLASS 8-30 — 1-30
EVENING CLASS 2-30 — 4-30

5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புக்களும் புதிய பிரிவு ஆரம்பமாகின்றன.

மு. குறிப்பு:- ★ குறிப்பிட்ட திகதிக்குப்பின் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.
★ கடமை கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
★ விடுதி வசதி உண்டு. [A 722]

## பிரயாண ஒழுங்கு

★ டென்மார்க்
★ மலேசியா
(உடனடியாக ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்.)

★ லிபியா ★ சிங்கப்பூர்
(பணிப்பெண்கள்)

ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் முதலியனவும் துரிதகெதியில் செய்துகொடுக்கப்படும்.

**Universal Agencies**
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்.)
(C 2663)

---

## உப்புவெளியில் 7 தமிழர் பலி

(திருகோணமலை)

திருமலை மாவட்டத்திலுள்ள உப்புவெளிப் பகுதியில் 7 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. (மா-க)

## மூன்றாவது நினைவஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''வவுனியாவில் வீரமரணமடைந்த தமிழீழத்தாயின் அருந்தவப்புதல்வனுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிக்கிறோம்'' என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோழர் பொன்னம்பலம் சிதம்பரநாதனின் [குமார்] மூன்றாவது ஆண்டு அஞ்சலி பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## மாரீசன்கூடலில் 'பொலி கிளினிக்'

[பண்டத்தரிப்பு]

சுகாதார மனித சேவைகள் கழகத்தின் ஆதரவில் இளவாலை மாரீசன்கூடல் கலப்பிராகிரி சனசமூக நிலையத்தில் ''பொலி கிளினிக்'' சிகிச்சை நிலையத்தின் திறப்புவிழா அண்மையில் திரு எஸ். மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. பண்டத்தரிப்பு பொதுசுகாதாரப் பரிசோதகர் திரு பொ. பேரின்பநாதன், பொதுசௌக்கியதாதி திருமதி சண்முகராசா, திரு. சிவலிங்கம் உட்படப்பலர் இதில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். செல்வி கௌசல்யா நாகரத்தினம் நன்றி கூறினார். [க]

## திருமலையில் சிங்களவருக்கு ஆயுதங்கள்

(திருகோணமலை)

திருமலை மாவட்டத்தில் வசிக்கும் சிங்களக் குடும்பங்களின் பாதுகாப்புக் கருதி அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை சின்னக்கடைப் பகுதியில் வசிக்கும் சிங்களக் குடும்பங்களுக்கு ஆயுதப்படையினர் ஆயுதங்கள் வழங்கியதாகத் தெரியவருகிறது.

இதுபோன்ற நடவடிக்கைகளால், இப்பகுதிகளில் வாழும் தமிழ்க்குடும்பங்களுக்கு மத்தியில் பலத்த அச்ச நிலைமை உருவாகியுள்ளது. இதன் பிரதிபலிப்பை தமிழர் வாழும் கிராமங்களில் காணக்கூடியதாக இருந்தது. (மா-க)

## கொத்தணி தலைமைப்பாடசாலை

(வவனியா)

''பூவரசன்குளம் பாடசாலையின் வளர்ச்சியே இப்பாடசாலை இம்மாவட்டத்தின் கொத்தணிப் பாடசாலையின் தலைமைப்பாடசாலையாக்க உதவியது.

பூவரசன்குளம் மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிப் பரிசளிப்பு விழாவின் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய வவனியா பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. வி. சபாநாயகம் தெரிவித்தார்

'பூவரசு' என்ற கையெழுத்துப் பிரதி நூலும் இவ்விழாவில் வெளியிடப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு. சு. சீனிவாசகம், கி. மு. ச. தலைவர் திரு. மு. பாலசந்திரன் ஆகியோரும் இவ்வைபவத்தில் பேசினர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரா காங்கிரஸ்—

# முக்கிய உறுப்பினர் நீக்கம்

# மத்திய குழு அங்கீகரித்தது

(புதுடில்லி)

**காலம்சென்ற இந்திரா காந்தியின் அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்த திரு. பிரணவ் முகர்ஜியும் மற்றும் மூன்று முன்னுள் முதலமைச்சர்களும் அகில இந்திய காங்கிரஸ் (ஐ) கட்சியிலிருந்து நீக்கப்பட்டதைத் கட்சியின் செயற்குழு அங்கீகரித்துள்ளது.**

கடந்த ஏப்ரல் மாதப் பிற்பகுதியில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அகில இந்திய காங்கிரஸ் (ஐ) கட்சியின் மத்திய குழுவில் பல திடீர் மாற்றங்களைச் செய்திருந்தார்.

கட்சியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட ஏனைய மூவரும், முன்னுள் மேற்கு வங்காள முதல்வர் திரு. ஏ. சி. சர்மா, முன்னுள் அசாம் முதல்வர் திரு. பிரகாஷ் நஹரோத் முன்னுள் உத்தரபிரதேச முதல்வர் திரு. ஸ்ரீபதி மிஸ்ரா ஆகியோராவர்.

காங்கிரஸ் (ஐ) கட்சியின் செயற்குழு நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடியபோதே இவர்களைக் கட்சியிலிருந்து விலக்கும் தீர்மானத்தை எடுத்தது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் மீது கட்சி முழு நம்பிக்கை வைத்திருப்பதை வெளியிடும் தீர்மானத்தை ஏகமனதாக அங்கீகரித்ததுடன், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோரின் இலட்சியங்களுக்கு திரு. ராஜீவ் காந்தி சொல்வடிவம் அளித்துவருவதாகவும் அத்தீர்மானத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியொன்றினுல் கட்சியின் ஒழுங்கு மற்றும் செயல்பாடு தொடர்பாகப் பல பிரச்னைகள் உருவாகியதாக மத்திய குழு உறுப்பினர்கள் கருதியதாகவும், ஒழுங்கீனச் செயல் எதையும் பொறுத்துக்கொள்ள இயலாதென்றும், அத்தகைய செயல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு உறுப்பினர்கள் கருதியதாகவும் திரு. நரசிம்மராவ் தெரிவித்தார்.

இவ்விடயத்தில்இந்தியதேசிய காங்கிரஸ் ஒரே மன உறுதியுடன் செயற்படவேண்டும் என்று தீர்மானத்தில் மேலும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. [வா]

## வேலணை

## அராலித்துறைப்பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வேலணை அராலித்துறைப் பாலம் புங்குடுதீவு தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கம் எடுத்த துரித முயற்சியால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் குன்றும் குழியுமாக இருந்த இப்பகுதியில் சுமார் 400 யார் தூரம் பொதுமக்கள் நடந்து சென்றே கடலுக்குள் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது.

சுமார் ஏழாயிரத்து ஐநூறு ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இப்பால திருத்த வேலைகளுக்குபுங்குடுதீவுஉழவுயந்திர உரிமையாளர்கள் இயந்திரங்களை வழங்கி மண் இழுக்க உதவியுள்ளனர்.

தொடர்ந்தும் இப்பாதை திருத்தப்பட வேண்டியுள்ளதால் பலரின் உதவியை புங்குடுதீவு தனியார்போக்குவரத்துச் சங்கம் நாடியுள்ளது. (து)

## யாழ். நகரில் பதற்றம்

## நீதிமன்றங்கள், கல்லூரி, காணிக்கந்தோர் ஸ்தம்பிதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நீதிமன்றத்திற்கு முன்னுல் நேற்றுமுன்தினம் காலையில் நடந்த துப்பாக்கி சூட்டினுல் அப்பகுதியிலுள்ள நீதிமன்றங்கள், காணிக் கந்தோர் மத்தியகல்லூரி ஆகியன இயங் வில்லை.

கோட்டைப் பகுதியிலிருந்து வந்த துப்பாக்கிச்சூட்டைத் தொடர்ந்து நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒய்வூதியமும் வழங்கப்படவில்லை

நீதிமன்ற விசாரணைக்கு வந்த கட்சிக்காரர் சிதறிஓடினுர்கள். நீதிமன்றம் வந்த ஒருசில ஊழியரும் சில சட்டத்தரணிகளும் உடன் திரும்பிச் சென்றனர். பதற்றநிலையைத் தொடர்ந்து நீதிபதிகள், சட்டத்தரணிகள் எவரும் வர முடியவில்லை. காணிக் கந்தோரும் திறக்கப்படவில்லை.

யாழ் மத்தியகல்லூரி நடைபெறவில்லை. காலையில் வந்த சில ஆசிரியரும், மாணவரும் உடன் திரும்பிச்சென்றனர். யாழ் பாரதிபாஷா வித்தியாசாலை, யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயமும் நடைபெறவில்லை மற்றும் கல்லூரிகளுக்கும் மாணவர் குறைவாக வந்திருந்தனர்.

கோட்டைப் பகுதியிலிருந்து சத்திரத்துச்சந்திக்கு தொடர்ச்சியாக துப்பாக்கிச்சூடுகள் வந்ததினுல் சந்தியிலுள்ள கடைகள் மூடப்பட்டன.

பிரதான வீதி, கே. கே. எஸ் வீதிகளில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது நேற்றுக்காலை நகரில், ஹெலிகொப்டர் வட்டமிட்டுச் சென்றது.

துப்பாக்கிச்சூட்டை தொடர்ந்து, புதிய தபால் சந்தோர் பகுதி, கடற்கரை வீதி, கொட்டடி, பண்ணை, கோட்டையைச் சுற்றியுள்ள வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன. (ஐ-க)

## உலகச் செய்திகள்

# 21 ஆப்கானிஸ்தான் அகதிகள்

## பாகிஸ்தானில் கொல்லப்பட்டனர்!

(கராச்சி)

பாகிஸ்தானில் தங்கியுள்ள இருபத்தொரு ஆப்கானிஸ்தான் அகதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்களைப் பெறுவதில் ஏற்பட்ட சச்சரவொன்றைத் தொடர்ந்தே இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

சோவியத், ஆப்கானிஸ்தான் படைகளை எதிர்த்து யுத்தம் செய்வதற்கு ஆயுதங் களைப் பெறுவதிலே ஏற்பட்ட தகராற்றில் இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். [வா]

## றீகன் குறித்து வெளியான வதந்தியில் உண்மையில்லை

### வெள்ளைமாளிகை அறிக்கை

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனுதிபதி திரு. றெுனல்ட் றீகன் குறித்து வெளிவந்த வதந்தியில் எந்த வித உண்மையும் இல்லை என்று வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனுதிபதி திரு. றீகன் சுடப்பட்டார் அல்லது மாரடைப்பினுல் பீடிக்கப்பட்டுள்ளார் என்று ஜப்பானிலும் மற்றும் ஐரோப்பிய பங்கு சந்தைகளிலும் அடிபட்ட பலமான வதந்தியை வெள்ளை மாளிகைப் பத்திரிகைப் பேச்சாளர் திரு. அல்பேர்ட் பிரஷ்ஷிஸர் மறுத்துள்ளதுடன் ஜனுதிபதி றீகன் நல்ல சுகமாக இருக்கிருரென்றும் தெரிவித்துள்ளார் [வா]

## ஜப்பான் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

(டோக்கியோ)

ஜப்பானிய பிரதமர் திரு. நாகசோனே நேற்று பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையைக் கலைத்து திடீர் பொதுத் தேர்தலை நடத்தி 3-வது தடவையாகவும் தம்மை பிரதமராகத் தெரிவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் விசேட அமர்வைக் கூட்டி அதனைக் கலைப்பதற்கானதீர்மானத்தை நிறைவேற்ற சபை கூடிய போது எதிர்க்கட்சிகள் அந்த கூட்டத்தைப் பகிஸ்கரித்தும் கூட பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதியதேர்தல் நடத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது. (து)

## போலந்தில்:

# தேடப்பட்டதொழிற் சங்கத்தலைவர்கைது

[வார்சோ]

நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த போலந்து சொலிடாரிட்டி இயக்கத்தின் தலைவர் திரு ஸ்பிக்னியூ புஜாக் கைதுசெய்யப்பட்டுளளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஸ்பிக்னியூ புஜாக் நான்கு வருடங்களின் பின் கைது செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமான செய்தி நிறுவனம் 'பாப்' அறிவித்தது.

1981ம் ஆண்டு போலந்து இராணுவச் சட்டத்தின் கீழ் சொலிடாரிட்டி தொழிற்சங்கம் தடைசெய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [வா]

## 'உலகக்கிண்ண' உதைபந்தாட்டம்:

# ரஷ்யா - ஆர்ஜன்ரீனு கோஷ்டிகள் வெற்றி

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோ நகரில் நடைபெற்று வரும் 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் ரஷ்யா, ஆர்ஜன்ரீனு ஆகிய கோஷ்டிகள் வெற்றி பெற்றுள்ளன.

### ரஷ்யா வெற்றி

ரஷ்யாவுக்கும் - ஹங்கேரிக்கும் இடையல் நடைபெற்ற ஆட்டத்தில், ரஷ்யா மிக இலகுவாக 6—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில், இடைவேளையின் போது, ரஷ்யா 2-0 கோல்களால் முன்னணியில் நின்றது.

### ஆர்ஜன்ரீனு வெற்றி

ஆர்ஜன்ரீனுவுக்கும், தென் கொரியாவுக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் ஆர்ஜன்ரீனு 3—1 கோல்களால் வெற்றி பெற்றது.

ஆசிய நாட்டுக் கோஷ்டியான தென் கொரியாவுக்கு மேற்படிப் போட்டியின் போது மைதானத்தைச் சுற்றியிருந்த பெருந்திரளான ரசிகர்கள் தமது ஆதரவைக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

### இன்றைய ஆட்டங்கள்

குறூப்-B:- பெறுகுவே எதிர் ஈராக்.

குறூப்-E:- மே. ஜேர்மனி எதிர் உருகுவே. டென்மார்க் எதிர் ஸ்கொட்லாந்து. (வி)

## "முன்னேடி கல்லூரிகளில் கனகரத்தினம் ம.ம.வி.யும் ஒன்று"

[யாழ்ப்பாணம்]

"அமரர் ஆ. சனகரத்தினத்தினுல் 1928ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்ற எமது கல்லூரி பொன் விழாக் கண்ட கல்லூரிகளில் ஒன்ருக மிளிர்கிறது. மத்திய மகா வித்தியாலயங்கள் நிறுவப்பட்ட காலத்திலேயே முன்னேடிக் கல்லூரிகளில் ஒன்ருக இப்பாடசாலை மிளிர்ந்ததை இலங்கைக் கல்விச் சரித்திரத்தை அறிந்தோர் நன்கறிவர்".

இவ்வாறு யாழ். கனகரத்தினம மத்திய மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் 1985 யூன் முதல் 1986 யூன் வரையிலான வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"பல மேதைகளையும், வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், கலாநிதிகளையும், அரசாங்க நிர்வாகிகளையும், பட்டதாரிகளையும் உருவாக்கிய எமது கல்லூரி இடைக் காலத்தில் சற்றுத் தளர்ந்திருந்ததையும் நாம் மறுப்பதற்கில்லை. இந்நிலையில் எமது செயற்குழு ஆரம்பமாவதற்கு சில வாரங்களுக்கு முன் எமது மாணவர்களின் அதிர்ஷ்டமாக எமது கல்லூரிக்கு அதிபராக கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவருமான திரு. மு. இராமலிங்கத்தை எமது கல்லூரிக்கு நியமித்துத்தந்த கல்விச் சேவை ஆணைக் குழுவினர்க்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது."

## பொதுக் கூட்டம்

[சுழிபுரம்]

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க பொதுக் கூட்டம் இம்மாதம் 15-ம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. புதிய பணியாளர் சபை தெரிவும் இக்கூட்டத்தில் நடைபெறவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பெரும்பான்மையோரால் தங்களுடைய துயரங்களைப் பொறுத்துக் கொள்ளமுடிகின்றது. ஆனல், மற்றவர்களுடைய இன்பத்தைத்தான் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.

—வில்லியம் பால்ஸ்

# நமது நோக்கு

## திசை திருப்ப வேண்டாம்: தீர்வுக்கு வழிகாண்க!

இந்தியா மேற்கொண்டு வரும் சமரச முயற்சிகளை வரவேற்கும் அதேநேரம் மேற்கு நாடுகளின் உதவிகளும் தாராளமாகக் கிடைக்க வேண்டுமென இலங்கை அரசு எதிர்பார்க்கின்றது.

குறிப்பாக இந்தியாவை நெருக்குதலுக்குள்ளாக்கி இலங்கை தீவிரவாதத்தலைவர்களை மடக்குவதுஅரசின் தந்திரம்.

இஸ்ரேல், பிரிட்டன், பாகிஸ்தான் முதலிய நாடுகளின் உதவியை நேரடியாகப் பெற்றுள்ள அரசு இப்போது அமெரிக்காவிடமும் பகிரங்கமாக இப்படியான உதவிகளைக் கோரத் தொடங்கியுள்ளது. ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட காலத்திலிருந்தே இவ்வுதவி கோரப்பட்டு வந்துள்ள போதிலும், இலங்கைப் பிரச்னையை ஓரளவுக்கு அறிந்து வைத்துள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாண முயலும்படியே பெரும்பாலும் ஆலோசனை வழங்கி வந்திருப்பதாகத் தெரிகின்றது.

''ஆஸியன் வால் ஸ்ட்ரீட் ஜேர்னல்'' பத்திரிகையில் அமெரிக்க ஹவாய்பல்கலைக்கழக பயிலுநரான திரு. மார்க்ஸ் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் இக்கூற்றுப் புலனுகின்றது.

''இங்கே உள்ள அமெரிக்கத் தூதரகத்துடனன எமது உறவுகள் நன்ருகவே உள்ளன. ஆனல் கிளர்ச்சி நிலைமை பற்றி ஏதாவது பேச்சு எழும் போதேல்லாம் ''அரசியல் தீர்வின்அவசியம்''பற்றியே எமக்கு அமெரிக்க அதிகாரிகள் உரையாற்றுகிருர்கள்'' என இலங்கை அரசின் உயர் அதிகாரி ஒருவர் எரிச்சல் பட்டதாக மார்க்ஸ் எழுதியுள்ளார்.

அமெரிக்க உதவி எப்படி அமைய வேண்டும் என்பதற்கு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் விருப்பத்தை மார்க்ஸ் தம் கட்டுரையில் வெளிப்படுத்துகிருர்: இலங்கை ஆயுதம் கொள்வனவு செய்வது மீதான தடைகளை நீக்குதல், உளவு விடயங்களில் ஒத்துழைப்பு, குறிப்பாக பயிற்சிகள் மற்றும் இந்தியாவில் தீவிரவாதிகளின் நடமாட்டங்கள் விடயத்தில், கடல் நடவடிக்கைகளில் உதவுதல்; குறிப்பாக இந்தியாவிலிருந்து கெரில்லாக்கள் இங்கு வருவதைத் தடுப்பதற்கான விசேட கருவிகள், நிவாரணப் பணிக்கென கெரில்லாக்களுக்காக அமெரிக்காவில் நிதிசேகரிப்பதை தடுத்தல், இலங்கைக்கெதிராக ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்காவிலிருந்து செயற்படும் தமிழ் குழுக்களின் நடவடிக்கைகளை நிறுத்தல், இலங்கை தீவிரவாதசெயல்கள் தொடர்பான அமெரிக்க பத்திரிகைகளின் போக்கை சீராக்குதல்.

தீவிரவாதிகள் மார்க்ஸியவாதிகளாக இருந்த போதிலும் அவர்களுக்கு சார்பாகவே இந்தியா இருந்துவருவதால்இலங்கை மேற்கு நாடுகளுக்குச் சார்பான ஒரு கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டும் என பல இலங்கையர்கள் விரும்புவதாகவும் திரு. மார்க்ஸ் எழுதுகிருர்

மார்க்ஸ் என்ற இந்த மனிதர் அண்மையில் வடக்கில் ஆயுதப்படைகள் நடத்திய தீவிர தாக்குதல்களின்போது யாழ்ப்பாணத்திலிருந்துள்ளார்.

ஆயுதப்படைகளுக்குள்ள குறைபாடுகளைத் தமது கட்டுரையில் எடுத்துக் கூறியுள்ள இவர் குறித்த நாட்களில் நடந்த தாக்குதல்களை மிக இலகுவானதாகவே மதிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி மீது தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டதைத் தாம் பார்க்கவே இல்லையாம். ஆக அப்பகுதியில் தீவிரவாதிகள் மண்மூடைகளை அடுக்கி ராணுவத்தைத் தாக்கத் தயாராய் இருந்ததை மட்டும் பார்த்தாராம். பாவம்!

படை விமானங்களிலிருந்துகொண்டுதூரதிருஷ்டிக் கண்ணுடி வழியாக நோட்டமிட்டுள்ள இந்த மனிதர், விமானங்கள் குண்டு வீசியதையோ, ஹெலிகொப்டர்கள் யந்திரத் துப்பாக்கிகளினல் பல நிமிடங்கள்வரை சுட்டுத்தள்ளியதையோ பார்க்காமல்போனது விசித்திரம் தான்!

தீவிரவாதிகள் ராணுவ முகாம்கள் மீது பயங்கரத் தாக்குதல்களுக்கு ஆயத்தமாகி நிற்பதைக் கண்டதாகக் கூறும் இவரால் பொதுமக்கள் வதியும் குடியிருப்புக்கள்மீது கண்மூடித்தனமாக மீண்டும் மீண்டும் பொம்பர் விமானங்கள் பயங்கரக் குண்டுகளைப் பொழிந்ததையும், அதனல் ஏற்பட்ட அழிவுகளையும் பார்க்கமுடியாமற் போய் விட்டது.

ஆஸ்பத்திரியில் குண்டு விழுந்ததா இல்லையா என்பதை அங்கு சென்று பார்த்தவர்களுக்குத் தான் தெரியும். ராணுவத்தினரின் விருந்தாளியாக வந்து விமானத்தில் பறந்து திரிந்து விட்டு ஒருதலைப்பட்சமாகக் கட்டுரை எழுதுகிறவர்களுக்கு எப்படிச் சாதாரண மக்களின் கஷ்டங்கள் புரியும்?

அமெரிக்க தூதரக அதிகாரிகள் பாரபட்சமற்ற முறையில் இதுபற்றி ஆராய்ந்தால் உண்மை வெளிப்படும்.

அரசியற் தீர்வொன்று ஏற்பட்டாலும்கூடத் தீவிரவாதிகள் அதைக் குழப்பிவிடுவார்கள் எனச் சிங்களத் தலைவர்கள் சிலர் கருதுகிருர்கள் எனவும் மார்க்ஸ் எழுதுகிருர்.

அரசியல் தீர்வுதான் என்ன? அதைத் தெளிவாகச் சொல்வதற்கே இன்னமும் இழுபறி; அதற்குள் தீவிரவாதிகள் குழப்பிவிடுவார்களென்று ஏன்சாட்டுக்கள்?

# மறைந்த இசைமேதை ரி. ஆர். மகாலிங்கம்

மறைந்த இசைமேதை புல்லாங்குழல் ரி. ஆர். மகாலிங்கம் அவர்களைப் பற்றிய ஒரு சிறப்புக் கட்டுரை இது. மேதைகளிடம் காணப்படும் விசித்திரப்பழக்கங்களில் ஒன்றை கட்டுரையாளர் இங்கு குறிப்பிடுகிருர். [நடிகரும் பாடகருமான ரி. ஆர். மகாலிங்கம் வேறு, புல்லாங்குழல் ரி. ஆர். மகாலிங்கம் வேறு. நடிகர் மகாலிங்கம் மறைந்து வெகுகாலமாகிவிட்டது.]

'மாலி'' என்று கர்நாடக இசை ரசிகர்களால்செல்லமாக அழைக்கப்பட்டு வந்த புல்லாங்குழல் மேதை ரி. ஆர். மஹாலிங்கம் அவர்கள் மறைந்தார், என்ற செய்தியை வானெலி மூலமாக அறிந்த போது அதிர்ச்சியடையாத கர்நாடக இசை ரசிகர்களே இருந்திருக்க முடியாது.

இசை விற்பன்னர்களின் மறைவுகளை, ''ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு'' என்று குறிப்பிடுவது மிகையாகாது, ஏனெனில் அவரவர்களுக்கே உரிய பாணி, தனித்துவமான நடை, ஞானம் போன்றவை அதே தரத்திற்கு ஏனையோர்களிடம் உருவாவது என்பது மிகக் கடினமான ஒன்ருகும்.

காலம் சென்ற இசைமேதை மஹாராஜபுரம் விஸ்வநாதையர், அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், மதுரைமணிஐயர், ஜி. என். பாலசுப்ரமண்யம், எம். டி. ராமநாதன் போன்றவர்களது தனித்துவமான பாணி நிரப்ப முடியாத ஒன்ருகவே உள்ளன. இந்த வரிசையில் மாலி அவர்கள் தமக்கென்று ஒரு பாணியையும், ரசிகர்களின் அமோக ஆதரவையும் அன்பையும் பெற்ற தனித்துவமான கலைஞராவார்.

பிறவிமேதையாகிய இவர் புல்லாங் குழலை குருவிடம் முறையாகக் கற்காமல் தனது சொந்த முயற்சியிலேயே பாண்டித்யம் அடைந்தவர். தஞ்சை மண்ணில் பிறந்த மாலி அவர்களின் குடும்பத்தில் இசைஞானம் சிறந்ததாக

சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரன்

இருந்ததால்' அவர் புல்லாங்குழலில் உன்னதநிலை அடைய ஏதுவாகஇருந்ததுஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா எங்கணும் இவரது குழலினிமை ஒலித்தது. மிக சிறுபராயத்திலேயே தனிக் கச்சேரிகள் நடாத்தத் தொடங்கி தனது மேதாவிலாசத்தை வெளிப்படுத்தினர்.

1965ம் ஆண்டு இசை மாணுக்கனுக சென்னை சென்ற எனக்கு மாலியின் கச்சேரிகளை நேரில் ரசித்ததமையும் சில சுவாரஸ்யமான சம்பவங்களும் நீங்காத நினைவுகளாக உள்ளன,

1965-ல் மைலாப்பூர் சாயிகான சபாவில் மாலியின் கச்சேரி. ஏக்கனவே அவர் ஒழுங்காகக் கச்சேரிகளுக்கு வர மாட்டார், சரியான மூட் இல்லாவிடில் பாதியில் எழுந்து பாய்விடுவார் என்றெல்லாம் ரசிகர்கள் பேசக்கொள்வதை கேட்டிருக்கின்றேன். மிக ஆர்வத்துடன் பெரிய மேதையின் கச்சேரியைக் கேட்கப் போகின்ருேம் என்று 5 மணிக்கே சபாவிற்கு போய் விட்டேன். அந்த நேரமே அரங்கு நிறைந்திருந்தது. பிரமுகர்கள், வித்வான்கள், ரசிகர்கள், மாணவர்கள் அனைவரும் அரங்கை நிறைத்திருந்தனர். அனைவரதும் முகத்திலும் சந்தேகக்கண், மாலி வருவாரா? மாட்டாரா? புன்சிரிப்புகளுடன் அனைவரும் பேசிக்கொண்டிருந்தனர். 6-30 மணிக்கு சபாவின்செயலாளர் தந்தி ஒன்றை பரபரப்பாக வாசித்துக் காட்டினர். 'மூட் சரியில்லாததால் பாண்டிச்சேரிக்கு போய் விட்டார்' என்பது தந்தியின் வாசகம். ரசிகர்கள் வழமைபோல் செல்லமாகக் கடிந்து கொண்டு அவரது மேதாவிலா சத்தையும், சிறுவயது முதல் அவரது கச்சேரிகளை ரசித்தவர்களது, விமர்சனத்தையும் கதைத்து விட்டுக் கலைந்து சென்றனர். இவரது கச்சேரி மீண்டும் எப்போது கேட்கலாம் என்ற ஆவல் எனக்குள் மேலும் வளர்ந்தது.

இரண்டொரு மாதங்களில் சென்னை எஸ். ஐ. இ. ரி. மகளிர் கல்லூரியில் மீண்டும் மாலியின் கச்சேரி, வழமை போல் பெரிய போஸ்டர் விளம்பரம். டிக்கட் தட்டுப்பாடு, அன்றைய கச்சேரிக்கு பக்க வாத்தியம், வாசிக்க விருந்த எமது கல்லூரி பேராசிரியர் பிரபல வயலின் வித்வான் ரி. என். கிருஷ்ணன் மிருதங்க வித்வான் திருச்சி சங்கரன் இவர்களது சிபார்சில் மேடைக்கு அருகில் நண்பர்களுடனும், மாணவர்களுடனும் அமர்ந்தேன். மண்டபத்தில் இருப்பதற்கே இடமில்லை. வழமைபோல் ரசிகர்களது முகத்தில் சந்தேகம் தான் அன்றைய நல்லகாலம் 7 மணியளவில் எதுவித ஆரவாரமின்று மாலி வந்தார். பெரிய வித்வான்களுக்குரிய பந்தா இல்லை. மிக எளிமையான தோற்றம். ஒருவாறு கச்சேரி ஆரம்பித்தது, கச்சேரி மிக மெதுவாக ஆமைவேகத்தில் ஆரம்பித்து 1 மணிநேரம் ஆகிறது. எனக்கோ சந்தேகம். இதுதானு பெரியவித்வானன் கச்சேரி. எனதுநண்பர்கள் கூறினர்கள். கொஞ்சம் பொறுத்திருந்து பார் சரியான மூட் வரும் போது அவரதுதிறமையை என்றனர். இந்த 1 மணத்தியாலயத்திற்குள் மாலி பக்க வாத்தியக் காரர்களுடன் ரகசியமாக கதைப்பது, சிரிப்பது எல்லாம் ரசிகர்கள் முன்னிலையிலேயே நடைபெறுகின்றன. ஒருகட்டத்தில் வயலின் வித்வான் ரி. என். கிருஷ்ணனை வயலின் தந்தியைமாற்றுமாறு மாலிகேட்கிருர். அவருஞ்சிறு பிள்ளைபோல் மாற்றுகிருர். அதையும் ரசிகர்கள் ரசிக்கின்றனர். இரவு 9 மணியளவில் தலைமைவகிக்கவந்த பிரமுகர் மாலைபோடுவதற்கும் பாராட்டிப்பேசவும் எழுந்திருக்கிருர் மாலி உடனே சரளமான பாஷையில் ''சும்மா இருங்கையா இப்போதான் சரியான மூட்வருகிறது. மாலையாவது மண்ணுங்கட்டியாவது'' என்கிருர். வந்த பிரமுகரோ சாமானியரல்ல ஆனாலும்அவரும் சிறுகுழந்தைபோல் தனது இருக்கையில் அமர்கிருர்.

மேலே கூறியவை மாலியின் மேதாவிலாசத்திற்கும் வித்வத் தன்மைக்கும் ரசிகர்கள், பிரமுகர்கள் அளிக்கும் மதிப்பின் பிரதிபலிப்பே. அன்றைய கச்சேரி இரவு 12 மணிவரை நடந்தது. சிம்மேந்திரமத்திமராக ஆலாபனையும் ராகமாலிகை ஸ்வரப் பிரயோகங்களும் ரசிகர்களின் வேண்டுகோளுக்கினங்க வாசித்த ''மகுடி'' யும் இன்றும்எனது காதில் ரீங்காரமிடுகின்றன.

இந்த மஹாமேதையுடன் இரண்டுநாள் பழகிய அனுபவம் எனக்கு ஒருசமயம்ஏற்பட்டது. இதை எனதுஇசை வாழ்க்கையில் பெரிய பாக்கியமாகவே என்றும் நினைக்க வேண்டிஉள்ளது.

வட இந்திய நகரங்களாகிய டெல்லி, கல்கத்தா, பிலாய் ஆகிய இடங்களில் கச்சேரிகள் நடத்துவதற்கு எமது கல்லூரிப் பேராசிரியர் பாலக்காடு கே. வி. நாராயணசாமி அவர்களுடன் சென்றேன். பிலாய் [பீகார் மாநிலம்] எமது நிகழ்ச்சியை முடித்து டெல்லி செல்லும் புகைவண்டியில் இரவு ஏறினேம். மாலியின் கச்சேரியும் அதன்பின்பு நடந்து, அவரும் டெல்லி கச்சேரிக்கு ஒரே வகுப்பில் ஏறினர். ஏனைய பிரமுகர்கள் வயலின் மேதை ரி. என். கிருஷ்ணன், மறைந்த மிருதங்க மேதை பாலக்காடு மணி ஐயர் அவர்கள் அன்றிரவு முழுவதும் மாலி, மணிஐயர் போன்ற மேதைகளுக்கு நானும், மணி ஐயரின் சிஷ்யனும் சகல பணிவிடைகளும் செய்தமை மறக்க முடியாததொன்ருகும். நாக்பூர் என்ற ஸ்ரேஷனில் டெல்லிக்குப் போகும் புகைவண்டிக்கு மாறவேண்டும். அதற்

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ சங்கம்

ஐயா,

6 5.86ம் திகதிய ஈழநாடுபத்திரிகையில் 2 ம் பக்கத்தில் 'பண்டத்தரிப்புப் ப.நோ.கூ. சங்க'ப் பொதுச் சபையைக் கலைக்குக' என்ற தலைப்பின்கீழ் வெளியான செய்தி எதுவிதமான ஆதரமுமில்லை. பண்டத்தரிப்பில் மக்கள் சபையானது நாங்கள் அறிந்த மட்டில் பொதுக்கூட்டத்தை ஒழுங்கு செய்யவுமில்லை நிர்வாகசபைக் கூட்டத்தை நடாத்தவுமில்லை என்பதைக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

தங்கள் பத்திரிகையில் கண்ணுற்ற பொதுச் சபையினர் உடனடியாக 18-5 86 ல் பொதுச்சபையை முறையாகக் கூட்டி ஓர் கண்டனத் தீர்மானத்தை நிறை வேற்றியுள்ளனர். ''பண்டத்தரிப்பு மக்கள் அவையால் தீர்மானிக்கப்பட்டு விடப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பான ஒன்றென்றும் அதிகாரமற்ற ஒரு சபை இத் தீர்மானம் எடுப்பது அருகதையற்றதென்றும் இத் தவறுன செய்தியை ஈழநாடு பத்திரிகையில் பிரசுரித்ததை ஆட்சேபித்து ஈழநாடு பத்திரிகை ஆசிரியருக்கு அறிவிக்க வேண்டுமெனவும் இத் தவருன செய்தி சம்பந்தமாக இம் மக்கள் அவையால் அனுப்பப்பட்ட அறிக்கைகள் ஆதாரமற்றதெனச் சுட்டிக் காட்டி யாழ் அரசாங்க அதிபருக்கும், யாழ் கூட். அபி. உதவி ஆணையாளருக்கும் அறிவிக்க வேண்டு மெனவும்'' அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே மேற் கூறப்பட்ட விபரங்களைத் தங்கள் பத்திரிகையில் திருத்தப் பிரசுரமாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனையிறவு முகாமில் பத்திரிகைகள் கடும் சோதனை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடப்படும் தம்ழ்தின சரிகள், ஆனையிறவு தடை முகாமில், கடும்சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன. படைவீரர்கள், பத்திரிகைகளில் வெளியிடப்படும் தமிழ்செய்திகளை சிங்களமாப்படுத்திக் காட்டுமாறு வீண் சிரமங்களைத் தருவதால், பஸ் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாவதாக அரசாங்க அதிபரிடம் புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது. (கெ)


கடைசிநேர வரிவிளம்பரம்

தேவை

Receptionist - cum- Cashier Trainee, Cook Western and Chinese, Stewards (பெண் பர்சாதகர்கள்) விண்ணப்பங்களுடன் நேரில் வரவும். ஹோட்டல் ஞானம்ஸ் 299, Clock Tower Road Jaffna. (C-2691

தவறிவிட்டது

No-93 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் சட்டத்தரணி த. சோமசுந்தரம் வீட்டருகில் வசிக்கும் க. ஆ. செல்லையா பிள்ளைஆகியஎனதுஅடையாள அட்டையும், மணிபர்சுடன் கூட இருந்தவையும் தவறிவிட்டன. மேல்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 2693]

ரி. சந்திரபாலன் ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். ரி. சந்திரபாலன், சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு. [C 2692]

லிடோ
தினசரி காலை 10-30, 2-30
இன்று முதல்
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிடோபட்டி சினிமாவில் வெலிங்டன சந்திக்கு அருகாமையில்
துப்பாக்கிவீரன் James Coburn
கவர்ச்சி அழகி Sophia Lorene
நீக்ரோ அழகன் Jim Brown நடித்த
FIRE POWER
5 பதக்கங்கள் பெற்ற மாபெரும் வெளியீடு.
10- 00, 2-15, 4-15, 6-30
வயது வந்தவர்களுக்கு மட்டும்


## மறைந்த...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

குள் மாரியின் மூட் மாறிவிட்டது. நான் டெல்லிக்கு வரவில்லை. மூட் சரியில்லை. சென்னைக்குப் போகிறேன் என்று எமது குழுவினர் அனைவரிடமும் கூறிவிட்டு அவர் சென்னை கைவண்டிக்குப் போய்விட்டார். வழக்கமாகக் கடுமையாக முகத்தை வைத்திருக்கும் பாலக்காடு மணிஐயரின் முகத்திலேயே புன்சிரிப்பு வந்தது. மாலியின் டெல்லி கச்சேரி அவ்வளவுதான். எமது குழுவினரின் கச்சேரி நாம் சென்றதும் சிறப்பாக நடந்தது.

இப்படியான சிறுகுறைகளை மாலி அவர்கள் கொண்டிருந்தாலும் இந்தியா எங்கும் அவரது ரசிகர்கள் அதிகம் தான். மாலியின் இசை அதிகமாக ஒலித்தட்டில் அமையவில்லை. ஏனென்றால் அவரது இசை கட்டுப்பாட்டிற்குள் அமைந்த ஒன்றல்ல. இது ரசிகர்களின் துரதிஷ்டம்தான்.

பிரம்மச்சாரியாக வாழ்ந்த மாலி சமீபத்தில் [50 வயதுக்குப்பின்] அமெரிக்க ரசிகை ஒருவரை மணந்தார். தனது தத்துவங்களை விரும்புகின்றவர் என்ற காரணத்தால் அவரை மணந்தேன் என்று மாலி பத்திரிகைகளில் கூறியுள்ளார்.

ஒரேயடியாகஅமெரிக்காவில் தங்கிவிடுவாரோ என ரசிகர்கள் ஏங்கினர். ஆனால் மாலி ஏமாறவில்லை. சென்ற ஆண்டு சென்னை வந்தார்.

சமீபத்தில் சென்னை தொலைக்காட்சியில் மாலியின் புல்லாங்குழல் கச்சேரி அவரது அமெரிக்க மனைவி பின்னணிலிருக்க வெகு சிறப்பாக அமைந்தது. யாழ்ப்பாண ரசிகர்கள் பலரும் பார்க்கக்கூடியதாக இருந்தது.

மாரடைப்பால் காலமான இந்த வேங்குழல் வேந்தனின் மறைவு கர்நாடக இசைக்கு பேரிழப்பாகும். வழமைபோல் கர்நாடக இசைஉலகில் மாலியின் இடமும் நிரப்பப்படாத ஒன்றுதான்,

## நாகபூஷணி அம்பாள் உற்சவம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில வருடாந்த மகோற்சவம் அடியார்களின் பிரயாண வசதியீனம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மூன்னர் இம் மகோற்சவம் இம் மாதம் 7-ம் திகதி சனிக்கிழமை நடை பெறவிருந்தது குறிப்பிடத்தக்கது. (சிவ)

## போக்குவரத்து---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திகதி முதல் தடைப்பட்டதையடுத்து தீவுப்பகுதிப் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் யாழ் கல்விக்கந்தோரில் கையொப்பமிட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாடசாலைகள் நடைபெறாத நாட்களுக்குப் பதில் பாடசாலை நடாத்துவதற்கான ஒழுங்குகளை பாடசாலை அதிபர்கள் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பதில் பாடசாலை நடத்துவதற்கான ஒழுங்குகள் பற்றி பாடசாலை அதிபர்கள் தமது வட்டாரக் கல்வியதிகாரிமூலம் தமக்குத் தெரியப்படுத்தவேண்டும் என கல்விப் பணிப்பாளர் வேண்டுகிறார்.

இத்துடன் புங்குடுதீவு கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்களும், கொத்தணிப் பாடசாலை அதிபர்களும் 9ம் திகதி காலை 9 மணிக்குத்தமது வட்டாரக் கல்வி அதிகாரியை அவரது அலுவலகத்தில்சந்திக்கும்படியும் வேலணை வட்டாரப்பாடசாலை அதிபர்கள் 10ந் திகதி காலை 9 மணிக்குத் தமது வட்டாரக் கல்வி அதிகாரியை அவரது அலுவலகத்தில் சந்திக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மத்திய கல்லூரி: ஆரம்ப பாடசாலையிலும் ஷெல் வெடி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலையில் நேற்று முன்தினம் ஷெல் விழுந்து வெடித்ததால் மாணவர்களின் மலசலகூடம் முற்றாகச் சேதமடைந்தது. பாடசாலையில் சிறுபகுதியும் சேதமாகியுள்ளது.

நேற்றுக்காலை இப்பகுதியில் கேட்ட வெடிச்சத்தங்களைத் தொடர்ந்து பதற்றம் நிலவியது. யாழ் நீதிமன்றத்திலிருந்த வழக்கறிஞர்கள் பலர் வீடு திரும்பினார்கள். (ஐ)

## இடதுசாரிகள் மூவர் கைது

(கொழும்பு)

அரசினால் தடைசெய்யப்பட்டுள்ள இடதுசாரி கட்சியொன்றின் மூன்று உறுப்பினர்கள் நேற்று மிரிஹானவில் கைது செய்யப்பட்டுளளதாகத் தெரியவந்துள்ளது. அரசுக்கு எதிரான துண்டு பிரசுரங்கள் இவர்கள் வசமிருந்து கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதே கட்சியைச்சேர்ந்த ஒன்பது உறுப்பினர்கள் இதற்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [ய-செ]

## ஆயுர்வேத...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தப்படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்பது தெரிவிக்கப்படுகின்றது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானவர்கள் பெயர் விபரம் வருமாறு:

ஆயுர்வேத வைத்தியர் அ. வை, தங்ககணபதி (வயது50) சாம்பல்தீவு உப அலுவலகரும், வர்மேற்பார்வையாளருமான இரா. அரியநாயகம் (வயது 45) சாம்பல்தீவு உப அலுவலக பொறுப்பதிகாரி கனகசிங்கம் (வயது 47), சிறீஸ்கந்தராசா [வயது 32), ஜெயானந்தம் (வயது 33), யோகராசா (வயது 37), யோகானந்தம், திருமதி கனகரட்ணம் (வயது 35], இவரது 7 வயதுப் புதல்வி மற்றும் வேறொருநபர் உட்பட பத்துப் பேர் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் கொல்லப்பட்ட இவர்களின் சடலங்கள் திருமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டன

இறந்த 10 பேரில் 4 பேரின் சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இப்படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து திருமலை மாவட்டத்தில் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது.

## இனப்பிரச்னை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளில் இலங்கையில் நிகழும் தீவிரவாதப்போக்கினை ஒழிக்கத் தாம் திட்டமிட்டுள்ளதாக கூறிய ஜனாதிபதி

தமிழகத்திலிருக்கும் தீவிரவாதத் தலைவர்களை நாடுகடத்தும் நடவடிக்கையில் இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஈடுபடாத போதிலும் அவருக்குப் பிறகு பிரதமராக வந்த திரு. ராஜீவ் காந்தி அந்த நடவடிக்கையில் ஈடுபட்டார். இருந்தும் நாடுகடத்தப்பட்டவர்கள் மீண்டும் இந்தியாவுக்கு வந்ததன் காரணத்தினாலேயே இனப்பிரச்னை இன்று மேலும் விரிசல் நிலையை அடைந்துள்ளது என்றும் கூறினார்.

இதேவேளை அங்கு உரையாற்றிய பிரதமர் ஆர். பிரேமதாஸா இனப்பிரச்னை குறித்து நாளை வியாழக்கிழமை எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய விவாதம் ஒன்று நடத்தப்படவுள்ளதாகத்தெரிவித்தார். (ரா)


UDUVIL GIRL'S COLLEGE
Announces its Prize-Day
on
Saturday the Seventh of June, 1986
at
9-00 a. m. in the College Hall
The Principal Staff and Students
invite Parents, Past Pupils and Well-Wishers
to the Celebration
Chief Guest;
THE RT. REV. DR. B. DEOGUPILLAI
Guest of Honour:
MRS. J. T. CHELLIAH
[A-811]

உ
திருமண அழைப்பு

1986ஆம் ஆண்டு ஆனி மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லைக் கந்தன் தேவஸ்தானத்தில்,

செல்வன் கு. அன்னலிங்கம் Inter Continental Hotel, Al. ain அவர்கட்கும்

செல்வி இ. பரிமளா (B A Cey) Dip in Education (ஆசிரியை, யழ்/இ ம. கல்லூரி அவர்கட்கும்

நடைபெறும் திருமண வைபவத்தில் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் குடும்ப சமேதரராய்க் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:- இல. 21, பிறவுண் வீதி, 5-ம் ஒழுங்கை, யாழ். வளாகத்தடியில் நடைபெறும்.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

திரு. சி. குணசேகரமும் பாரியாரும்
37, A. V. றோட்,
கொழும்புத்துறை.
(C-2698)

திரு. திருமதி மாசிலாமணி J P.
21, பிறவுண் வீதி,
5-th லேன்,
யாழ்ப்பாணம்.


## ஸ்தம்பிதம்

[யாழ்ப்பாணம்)

டீசல், பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக வடபிரதேச போக்குவரத்துச்சபை இயங்க முடியாதிருப்பதும் யாழ் ஆஸ்பத்திரி செயல்படமுடியாதிருப்பதும் தொடர்பாக மேலிடத்துக்கு அறிவிக்கப்பட்டுளளதாகத் தெரியவருகிறது. (ஐ)

## குண்டுப்புரளி

[கொழும்பு]

கொழும்பில் பல முக்கிய இடங்களில் தொடர்ச்சியாக நேற்றும் குண்டுபுரளிகள் ஏற்பட்டன.

பல பாடசாலைகளில் குண்டுகள் வைக்கப்பட்டதாகக் கிடைத்த தகவல்களையடுத்து பாடசாலைக் கட்டிடங்கள் சோதிக்கப்பட்டனவாயினும் குண்டுகளெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை

இதனிடையே கொழும்பிலுள்ள எயர்லங்கா நிறுவனத்தின் தலைமையலுவலகம்,' சி. ரி. ஓ.' ஆகிய இடங்களிலும் குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாகக்கிடைத்த தகவலையடுத்து அவ்விடங்களில் பதற்றம் ஏற்பட்டது. (செ)

## ஈழவர் முன்னணி வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்)

''இன்று அரச பயங்கரவாதம் வடக்கு-கிழக்கு, மலையகம் உள்ளடக்கிய பகுதிகளில் மிகவும் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதுடன் காலைவெறித்தனம் நாடு பூராவும் உள்ளதை உணமுடிகிறது இவற்றை வெளிக்கொணர்ந்து நேச சக்திகளை வென்றெடுக்குமுகமாக நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழ்பேசும் மக்களனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம் ''

இவ்வாறு தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புக்களும் ஒன்றுசேர்ந்து நாளை நடாத்தவுள்ள ஆர்ப்பட்ட ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு ''ஈழவர் முன்னணி'' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## 'ஹிஜ்ரா'...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் ஒருகையில்சாராயப்போத்தல்களுடனும் மறுகையில் வாளுடனும் மதுபோதையில் ஐவர் ஏறிக்கொண்டார்கள்.

ரயில் புறப்பட்டதும் ஐந்து அந்த ஐந்து காடையர்களும் ரயிலின் பின்பக்கமகவுள்ள பெட்டிக்குச் சென்றார்கள்.

சாராயத்தைக் குடித்துக் கொண்டே பெட்டிகளுக்குள் இருந்த பிரயாணிகளை இனம் கண்டு கையிலிருந்த வாளால் கண்டபடி வெட்டத்தொடங்கினார்களாம். பிரயாணிகள் எல்லோரும் அல்லோகல்லோலப்பட்டு அவலக்குரல் எழுப்பினார்கள்.

பெண்களின் நகைகளும் ஏனைய பிரயாணிகளது உடமைகளும் சூறையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கெக்கிராவரயில் நிலையத்தை 'ஹிஜ்ரா' ரயில் சென்றடைந்ததும் அட்டகாசம் செய்த அக்காடையர் கோஷ்டி பெட்டிகளில் இருந்த பெண்களைப் பிடித்து இழுத்தனர். இவ்வேளை ரயில் புறப்பட்ட ஆயத்தமானபோது அந்த நடவடிக்கையைக் கைவிட்டு, ரயில்பிறேக்பைப்பினை உடைப்பதற்கு அவர்கள் முயற்சித்தார்கள் ஆனால் ரயில் சாரதி வேகமாக ரயிலை ஓட்டவே இம் முயற்சி கைவிடப்பட்டது

'ஹிஜ்ரா' மாகோவைச்சென்றடைந்ததையடுத்தே காயமடைந்த பிரயாணிகள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் இரத்த வெள்ளமாகக் காட்சியளித்த இருபெட்டிகளையும் அங்கு அப்புறப்படுத்திய பின்னர் மேலும் இருபெட்டிகளை இணைத்துக்கொண்டு கொழும்புநோக்கி அந்த ரயில் புறப்பட்டது. [மா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பியுங்கள்"

## மக்கள் கட்சி வேண்டுகோள்

[கொழும்பு]

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக இதுவரை எடுத்துவந்த நடவடிக்கைகளைபற்றி இங்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் விளக்கமளிக்க வேண்டும் என இலங்கை மக்கள் கட்சி கேட்டுள்ளது.

இதுதொடர்பாக இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றில் ஐக்கிய இலங்கை என்ற அமைப்பின்கீழ் இங்குள்ள அனைத்துமக்களும் அச்சமின்றி வாழ்வதற்காக ஒரு நியாய பூர்வதீர்வு காணுவதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம். இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசு தான் எடுத்துவரும் முயற்சிகளைப்பற்றி இங்குள்ள கட்சிகளுக்கு விளக்கமளிப்பதுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளையும்ஆரம்பிக்கவேண்டும் எனக் கூறியுள்ளது.

(செ-க)

# "சமுதாயக் கட்டுக்கோப்புக்கு பெண்களின்பங்கு அவசியம்"

(யாழ்ப்பாணம்)

"பெண்களே நாட்டில்முக்கியமானவர்கள். அவர்கள் ஒழுக்கம் மிகுந்தவர்களாகவும் இறை சிந்தனையுள்ளவர்களாகவும் இருந்தால்தான் கட்டுக்கோப்பான சமுதாயம்ஒன்று உருவாகும். மாணவர்கள் ஆசிரியர்களைக் கனம் பண்ணுவதுடன் தங்களை வளர்த்து ஆளாக்கிய பாடசாலைக்கும் என்றென்றும் நன்றியுள்ளவர்களாகஇருத்தல் வேண்டும் அப்பொழுதுதான் கல்வி மேம்பாடு அடையும்."

இவ்வாறு இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சித்ரூபானந்தா வேம்படி மகளிர்கல்லூரியில் மாணவர்கள் மத்தியல் உரையாற்றுகையில் கூறினார்.

மேலும் சுவாமிகள் ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ராமகிருஷ்ணலயம் சார்பில் க. பொ. த. [சாதாரணம்] பரீட்சையில் எட்டுப்பாடங்களிலும் அதிதிறமைச் சித்திகளைப் பெற்ற செல்வி அனுஷியா அருணசலம், செல்வி யசோதரா தயாபரன் ஆகியோருக்குப் பரிசில்களை வழங்கினர்.

தொடர்ந்து நவாலியில் டாக்டர் சிவாஜியின் இல்லத்தில் நடந்தசத்சங் கத்தில்கலந்துஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாழ்க்கையைப் பற்றிச் சொற்பொழிவொன்றை சுவாமிகள் வழங்கினர்கள்

(க)

# மருந்துகள் தட்டுப்பாட்டு

(வட்டுக்கோட்டை)

சங்கானை அரசினர் பொது வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக நோயாளர் அவதியுறுகின்றனர் குறிப்பாகக் பல் வைத்தியப்பகுதியில் விறைப்பு மருந்து இல்லாததால் பல் நோயாளர்கள் பலரும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அறியப்படுகிறது.

# கிராமிய உழைப்பாளர் சங்ககிளை

[காரைநகர்]

காரைநகர் ஊரி கிராமத்தில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் கிளை ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளையின் தலைவராக திரு. க. பரமு தெரிவுசெய்யப்பட்டார். சுமார் ஆயிரம் உழைக்கும் மக்கள் கலந்துகொண்ட இக்கூட்ட முடிவில் கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டதுடன 8பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.


# பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி

★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் குறைந்த செலவில் அழைத்துச் செல்வார்.

5-6 86-ல் Denmark செல்ல விரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

V M . Balasingam,
Hotel Orchid Inn,
57J/6 Galle Road,
Wellawatte.

உடனடியாகப் பாஸ்போட்டுடன் தொடர்பு கொள்ளவும்

★ சவூதியில் கிளீனர் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,

★ குவைத்தில் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,

பாஸ்போட், BOND, ரிக்கற் முதலியனவும் துரிதகெதியில் செய்துதரப்படும்.

**GROUP ATLANTIC**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக] (A 710)


# மீண்டும் இராணுவசோதனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் மீண்டும் இராணுவசோதனைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. நேற்று முன்தினம் இங்கிருந்து புறப்பட்ட இராணுவம் பாரதிபுரம், கிருஷ்ணபுரம் கிராமப்பகுதிகளில் தேடுதல் நடத்தியுள்ளனர்.

# சாரணியபயிற்சிக் கருத்தரங்கு

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதி பாடசாலை சாரணர் மாணவ அணித்தலைவர் களுக்கிடையிலான பயிற்சிக் கருத்தரங்கொன்று வேலணை சேர்வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு செ. வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த சாரணர் தலைவர்களுக்கிடையிலான பயிற்சி கருத்தரங்கில் உதவி மாவட்ட சாரணர் ஆணையாளர்கள் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்கள்.

இங்கு "தீவுப்பகுதி சாரணர் ஆசிரியர்களுக்கான அவஸ்தை ஒன்று" என்ற பகுதி பயிற்சியும் நடத்தப்பட்டது.

# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி- 21 (4 - 6 - 1986)
கிழமை- புதன்
திதி- துவாதசி பி. ப. வரை
நக்ஷத்திரம்- அச்சுவினி பி. ப. வரை

**மேடம்:** கொள்கை நல்ல சந்தர்ப்பத்தைக் தேடித்தரலாம். பிள்ளை யொன்றின் பிணி கவலையைக் கொடுக்கும். அமைதி நன்று.

**இடபம்:** [illegible]ப்படுதாவில் இன்பக்கூத்து. வாழ்க்கை சிலகாரியங்கள் நிறைந்ததாக இருக்கும்

**மிதுனம்:** குறை கேட்க நேரிடும் கடமையில் தடை தோன்றும். நஷ்டத்திற்கு இடமுண்டு.

**கடகம்:** தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்துச்சிபார்சும் கிடைக்கும். வணிகர்கள் பொது மக்களின் நன்மதிப்பை பெறுவர்.

**சிங்கம்:** புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும் வியாபாரிகளுக்கு பண விவகாரத்தில் திருப்தியேற்படும்.

**கன்னி:** வயிற்றுக் கோளாறு ஏற்படும். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

**துலாம்:** களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு புத்திரவழியாலும் சிறப்புண்டு தொழிலிலும் தொல்லைகள் நீங்கும்.

**விருச்சிகம்:** பணத்தைக் கொடுத்து பகையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில்துறையிலும் சோர்வு தென்படும்.

**தனுசு:** பொதுப்பணி மூலம் புகழுக்கு இடமுண்டு அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்ட தினம். பிதாவழிமூலம் பொருள் வரவுமுண்டு.

**மகரம்:** தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும் வரவிலும் திருப்தி தென்படும். திடீர் வரவுமுண்டு

**கும்பம்:** செலவுக்கு வேண்டியபணம் இன்று கிடைக்கும் விருந்து பசாரங்களில் அதிகம். உற்சாகம் காட்டுவீர்கள். சிறப்பான தினம்.

**மீனம்:** கழுகுப்பார்வை வட்டமிடும். காத்திருப்பர் பகைவர். [illegible] தவிர்க்க மதிவழி நில்.

திருமலை ரவீந்திரன்

பரமஹம்சரின் ஜெயந்திவிழா:

# மாணவரிடையே பேச்சுப் போட்டி நடத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி விழாவினை முன்னிட்டு- எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் சகல பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றும் பேச்சுப்போட்டியினை நடாத்தவுள்ளது. ஆண், பெண் இருபாலார்க்கும் தனித் தனியாக இப் போட்டிகள் நடாத்தப்படும்.

இப்பேச்சுப் போட்டியில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் யூன் மாதம் 25 ந் திகதிக்கு முன்பாக கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள சாந்தி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி சங்கம் வேண்டுகின்றது.

கீழ்பிரிவு 75 யூலை க்குப்பின் பிறந்தோர். மத்திய பிரிவு யூலை 71 க்குப்பின் பிறந்தோர் மேற்பிரிவு 67 யூலை க்குப்பின் பிறந்தோர். அதிமேற்பிரிவு 61 யூலை க்குப்பின் பிறந்தோர் என்ற நான்கு பிரிவுகளுக்கிடையே இப் போட்டிகள் நடாத்தப்படும் எனத் தெரிகிறது.

(ஐ)

# விசுவலிங்கத்தின்மறைவுக்கு இன்று அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தலைவர் திரு. கே. விசுவலிங்கத்தின் மறைவையொட்டி இன்று யாழ் இந்து விடுதியில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

நல்லூர் இந்து விடுதியில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள இவ்வஞ்சலிக் கூட்டத்திற்கு போராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகிப்பார் யாழ் ஆயர் பி. தியோகுப்பிள்ளை, யாழ் அரசாங்க அதிபர் திரு.மு. பஞ்சலிங்கம், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி வி. கே சிவஞானம், முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் உட்படப்பலர் அஞ்சலி உரைகளை நிகழ்துவார்கள்.

இவ்வஞ்சலிக் கூட்டத்தை பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழுவினர் ஒழுங்கு செய்துள்ளார்.

(ஐ)

# நூல்வெளியிட ஏற்பாடு

(கிளிநொச்சி)

எழுத்தாளர் கோப்பாய் சிவத்தின் சைவஆலய கிரியைகள் சம்பந்தமான நூல் ஒன்று வடபகுதி சர்வோதய அமைப்பாளர் திரு கே. கதிரமலையின் ஆதரவுடன் வெளியிட ஏற்பாடாகி உள்ளது இந்த நூலுக்கு நல்லை ஆதீனம் தம்பிரான் சுவாமிகளும் பேராசிரியர் கைலாயநாதக்குருக்களும் ஆசியுரை வழங்கியுள்ளனர்.

[க]

# கட்டுரைப் போட்டி முடிவு

[கொழும்பு]

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் கட்டுரைப் போட்டியில் செல்விகள் பேபிரணி தர்மராஜா முதலாவது இடத்தையும் சகுந்தலா நடராசா இரண்டாவது இடத்தையும், விஜிந்தா சிங்காரவேலு மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

(வா-க)


# LONDON EXAMS.

November / December, 1986

Week end classes

| பாடநெறி | | ஆரம்பம் | கட்டணம் |
|---|---|---|---|
| ICMA — | SECTION A | 7-6-86 | 600/- |
| | SECTION B | 7-6-86 | 300/- |
| IDPM — | PART I | 7-6-86 | 600/- |
| A.A.T — | PRELIM. | 7-6-86 | 400/- |
| | INTER | 14-6-86 | 500/- |
| I A B — | FOUNDATION | 7-6-86 | 250/- |
| | INTER | 14-6-86 | 300/- |
| | FINAL | 14-6-86 | 350/- |

Note: Student registration with the London Institutes will be done by us.

✶ வகுப்புக்கள் பாதுகாப்பான சூழலில்

விரிவுரையாளர் குழு:
A. ஏரம்பு, K ஜெயரட்ணம், S. கதிர் காமநாதன், யூஜின் மரியாம்பிள்ளை, கந்தையா நவரேந்திரன், S P சிவ பாதசுந்தரம், R.N. வரேந்திரன்.

✶ அச்சடித்த பாடக்குறிப்புகளும் வினு விடைகளும் இலவசம்.

CANTABIA Institute

(SHOOT OF OXONIA, COLOMBO)

21, Main Street,
Jaffna.

T. PHONE: 24201

[A 702]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றிய மூதறிஞர்

(யாழ்ப்பாணம்)

''நாவலர் பரம்பரையின் துலக்கத்தை நிலை நிறுத்திய பெருமை பண்டிதமணி ஐயா அவர்களுக்கேயுண்டு. கல்வி கற்ற காலந் தொட்டு இறுதிக் காலம் வரை மொழிக்கும் சமயத்துக்கும் அவரளவுக்குச் சேவையாற்றியவர்கள் இல்லையெனலாம் கல்வித் திணைக்களச் சார்பிலான நாவலர் தர்மகர்த்தா சபையில் அங்கம் வகித்து நாவலர் திட்டங்கள் வளர்ச்சி பெற நல்ல ஆலோசனைகளை வழங்கி வந்தார்கள். அவர்களது ஞாபகமாக இன்று இப்பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பெறு சைவ தமிழ் பண்பாட்டு நிலையம் வருங் காலச் சந்ததியின் உயர் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நிச்சயம் இருக்கும். பேரறிஞராகவும் மூதறிஞராகவும் விளங்கிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களது திருவுருவப் படத்தை அவர் கற்றுத் தேறிய நாவலர் வித்தியாலயத்திலேயே திறந்து வைக்கும் பேறு எனக்குக் கிடைத்ததையிட்டு யான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற பண்டிதமணி அஞ்சலி விழாவில் பண்டிதமணியின் திருவுருவப்படத்தைத் திரை நீக்கஞ் செய்து வைத்து உரையாற்றிய யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண வட்டாரக் கல்விஅதிகாரி திரு இ சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்தில் நாவலர் வித்தியாலய அதிபர் ஸ்ரீப. சிவஞானசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நாவலர் வித்தியாலய முன்னை நாள் அதிபர் பண்டிதர் இ. திருநாவுக்காசு பேசுகையில் ''இன்று ஒரு பல்கலைக் கழகமே செய்ய முடியாத ஒரு பெரும் வேலையை இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் செய்தவர் பண்டிதமணி அவர்கள். கல்வித் திணைக்கள நாவலர் தர்மகர்த்தா சபை சார்பில் சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலையம் நாவலர் பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுதலும், பண்டிதமணி அவர்களது திருவுருவப் படத்தை இங்கு திறந்து வைப்பதும் வெகு பொருத்தம் என்றார்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பேசுகையில்; ''உலகறிந்த பெருப் புலவர் பண்டிதமணி அவர்களது நூல்களில் சிறந்த ஆராய்ச்சியை யப்பான் நாட்டில் உள்ள அறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றார்.

# கொழும்புநகர் வரும் பொருட்கள் பரிசோதனை

[கொழும்பு]

வெளியூர்களிலிருந்து கொழும்பு மத்தியசந்தைக்கு வரும் சகல உற்பத்திப் பொருட்களையும் பரிசோதனை செய்யும்பணியில் பொலிஸார் ஈடுபடவுள்ளனர்.

மீன்பெட்டிகள், மரக்கறிகள் உட்பட அனைத்துப் பொருட்களும் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு தனித் தனியே பரிசோதனைசெய்யப் பட்டபின்னரே சந்தைக்குள் அனுமதிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு ஒழுங்குகுறித்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவு ஊடாக தென்னிலங்கைக்கு வர்த்தக லொறிகள் வருவதை பாதுகாப்புப்படையினர் தடை செய்துள்ளனர். (து-க)

# ''சேவைமனப்பான்மையை மாணவர்வளர்க்க வேண்டும்''

[யாழ்ப்பாணம்]

''சமுதாயத்தில் வாழும் சகல மக்களுக்கும் சேவை செய்யும் மனப்பான்மையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலையில் மட்டுமல்ல பாடசாலைக்கு வெளியேயும் சேவை செய்யத் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்' இத்தகைய சேவை மனப்பான்மை நோக்கங்களைக் கொண்டதே ''இன்ரரெக்ற் கழகம்''.

இவ்வாறு, றெட்டேறியன் குணரத்தினம் ரத்தினம் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 'இன்ரரெக்ற்' கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

மேற்படி வித்தியாலய அதிபர் திரு.மு இராமலிங்கம் தலைமையில் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது. இன்ரரெக்ற் கழகத்துக்குப் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப் பெற்றனர்.

தலைவர்: எஸ் குலேந்திரன் உபதலைவர் கே. ஜெயவேந்திரன், செயலாளர்; எஸ் சுமந்திரன், பொருளாளர்: செல்வி எஸ். தனுஜா. [ஐ]

## அராலி நீர்விநியோகம்;

# அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளமுடிவு

(அராலி)

அராலி வடக்கு வரியிறுப்பாளர் சங்கம் கடந்த வாரம் திரு. சா. வை இராசரத்தினம் தலைமையில்கூடி அராலி மக்களின் நன்மை கருதி பின் வரும் தீர்மானங்களை செயல் படுத்துவதென முடிவெடுத்துள்ளது

குறிப்பிட்ட சில மக்களுக்கு நீண்டகாலமாக குடிநீர்விநியோகத்திட்டம் உதாசீனம் செய்யப்பட்டுவந்துள்ளதால் இரண்டாவது நீர்விநியோகத் திட்டத்தின் கீழ் நீர் இணைக்கும் இயந்திரம் இணைக்சப் பட்டு பாரதி சனசமூகநிலைய வீதி அராலி கிராமமுன்னேற்றச் சங்க வீதி, செல்வா வீதி, அராலி இந்துக்கல்லூரி முன் வீதி, குலனை ஆகிய இடங்களுக்கு நீர் விநியோகத்திற்கான குழாய் போடுவதென தீர்மானிக்கப்பட்டது.

செட்டியாமடம் சந்தியில் நீர்விநியோகக்குழாய் போடப் பட்டும் அங்கு நீர் செல்லாதிருப்பதுபற்றி சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்து ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதெனவும், நீர் விநியோகம் சம்பந்தமான தேவையான நடவடிக்கைகளை அரசஅதிபருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது [க]


# கூலி ஆட்கள் தேவை

மன்னார் நீர் விநியோகத் திட்டத்தில்
தண்ணீர் குழாய்கள் தாழ்ப்பதற்கு
தேவையான கிடங்குகள் வெட்டுவதற்கு
ஆட்கள் தேவை.

தின கூலி அடிப்படையில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலை கொடுக்கப்படும்.

அடம்பன், வங்காலை ஆகிய வேலைத்தளங்களில் இருக்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்:

பொறியியலாளர்,
மன்னார் நீர் விநியோகத் திட்டம்,
சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி லிமிட்டட்,
மன்னார்.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் எமது யாழ்ப் பாணக் கிளை காரியாலயத்தினூடாகத் தொடர்பு கொள்ளவும். (A 810)


# கந்தர்மடம் இணக்கசபை

[யாழ்ப்பாணம்]

கந்தர்மடம் வட்டாரத்தையும் அதன் சுற்றுலையும் உள்ளடக்கிய ஓர் இணக்கச் சபை உருவாக்கப்பட்டுள்ளது இதன் தலைவராகக் திரு. நா தியாகராஜவும், பொதுச் செயலாளராக திரு. சி தர்மலிங்கமும், உதவிப் பொதுச் செயலாளராக திரு க உருத்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுளளனர்:

திருவாளர்கள் சு. கனகநாதன், சி. கனகசபை, செ தியாகராசா, கே. சி விநாயகேந்திரன், எம். சிவலிங்கம், சி நவரத்தினம், பொ கிருஷ்ணமூர்த்தி, ந நித்தியானந்தன்.

இவ் இணக்க சபை கந்தர் மடம் சந்தி பண்டிதர் சன சமூக நிலையத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. இவ்விணக்க சபையின் கடமையை நாடும் பொதுமக்கள் நேரிலோ அல்லது எழுத்துமூலமோ தொடர்பு கொண்டு தங்கள் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [க]

# மகனை விடுவிக்க உதவுமாறு அரசாங்க அதிபருக்கு மகஜர்

[பண்டத்தரிப்பு]

வெளிநாடு செல்வதற்காக தமது தங்கையுடன் யாழ். நகரிலிருந்து கடந்த ஏப்பிரல் 9ம் திகதி பஸ்சில் கொழும்பு சென்று கொண்டிருந்த வேளையில் கிளிநொச்சியில் வைத்து இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட பெரிய விளானைச் சேர்ந்த எஸ்தாக்கி நித்தியானந்தன் என்ற இளைஞர் தற்போது யாழ். கோட்டையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும், அப்பாவியான இவரை விடுதலை செய்ய சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு உதவுமாறு பிரஸ்தாப இளைஞரின் தாயார் திருமதி எஸ்தாக்கி செபமாலை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரஸ்தாப இளைஞரையும் அவரின் தங்கையையும் மேற் குறிப்பிட்ட தினத்தில் கைது செய்த இராணுவத்தினர் தங்கையை விடுவித்து விட்டதாகவும்; இளைஞரை கிளிநொச்சி ராணுவ முகாமில் சில நாட்கள் வைத்து விசாரணை செய்து விட்டு யாழ் கோட்டைக்கு அனுப்பி விட்டதாகவும் இது பற்றி தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவரை யாழ்ப்பாணம் கோட்டையில்சென்று பார்க்கமாதத்தில் ஒரு தடவை தாயாருக்கு அனுமதி வழங்கப் பட்டிருந்ததாகவும், கோட்டைப் பகுதியில் தற்போது ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையினால் அங்கு போய் மகனை பார்க்க முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [க]

# வட்டுக்கோட்டை ஆய்வு நூல்

(சுழிபுரம்)

வட்டுக்கோட்டைத் தொகுதியின் தலங்கள், கல்வி நிலையங்கள், பொது நிறுவனங்கள், பொருளியல் மூல வளங்கள், வாழ்க்கைக் குறிப்புகள், வரலாற்றுச் சபைகள், குடிசன விபரம் எனப் பல்வேறு ஆய்வு நூல் ஒன்றினை திரு. நாக. பத்மநாதன் வெளியிட ஏற்பாடு செய்துள்ளார். [க]

# வருடாந்த பொதுக்கூட்டம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், பதவியேற்கும் வைபவமும் அடுத்த மாத நடுப் பகுதியில் சாவகச்சேரியில் நடை பெறவுள்ளது.

# கலைத்துறை நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கலைத்துறையின் ஒவ்வோர் பிரிவினர்க்கும் 1986ம் ஆண்டுக்குரிய ஒதுக்கீட்டை நிர்ணயிப்பதற்கான கூட்டம் யாழ் செயலகக் கலந்துரையாடல் மண்டபத்தில் இம்மாதம் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

சென்ற மாதம் 10ம் திகதி நடைபெற்ற மாவட்ட கலாசார ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் ஒவ்வோர் கலைத் துறையினரும் 1986—1987ம் வருடத்துக்கான செயற்திட்டங்களைச் சமர்ப்பித்திருந்தனர். இந்த செயற்திட்டங்களை ஆராய்ந்து அவ்வவ் துறையினர்க்குரிய ஆண்டு ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# 'வாரித்தம்பி பொன்னம்பலம் வீதி'

[கிளிநொச்சி]

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் மரணமான சாவகச்சேரி - கல்வயலைச் சேர்ந்த வாரித்தம்பி . பொன்னம்பலம் நினைவாக கல்வயல் வீதிக்கு வாரித்தம்பி - பொன்னம்பலம் வீதி என பெயர் சூட்டப்பட்டுளளது.

அமரர் பொன்னம்பலம் கல்வயல் பகுதியில் பல சமூக சேவைகளை முன்னெடுத்தவர் என்றும் தமிழ் இனவிடுதலைக்காக பாடுபட்டவர் என்றும் அதனாலே இவ்வீதிக்கு அவரது பெயர் சூட்டப்படுவதாக அமரர் பொன்னம்பலம் குழுவினர் தெரிவித்தனர்.

# ஆசிரியர் பற்றுக்குறை

[வேலணை]

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியர் பற்றுக் குறை நிலவுகிறது.

எண்நூறுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயிலும் இக் கல்லூரியில் தற்போது 18 ஆசிரியர்ளே கடமையாற்றுகிறார்கள் இதனால் மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

# ''வொன்டபுல்'' சிவநாதன்



உடுவில் கிழக்கு திரு. சி. ஆறுமுகம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் சிவநாதன் அமரராகி ஒருவருடமாகி விட்டது.

தெல்லிப்பழை புனித மரியாள் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்த வரோதயா கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற சிவநாதன் ஒரு சிறந்த விளையாட்டு வீரர் பாடசாலை வாழ்க்கையிலே இவர் 1500, 3000, 5000 மீட்டர் ஓட்டங்களில் என்றுமே இரண்டாம் இடத்துக்கு செல்லவில்லை.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு மைல் ஓட்டப்போட்டியில் இவரின் அசுர ஓட்டத்தை கண்ட அக்கல்லூரி அதிபரான ஒறேற்றர் சுப்பிரமணியம் 'வொன்டபுல்'' சிவநாதன் என்று பாராட்டியதை அடுத்து அவருக்கு வொன்டபுல் என்ற பட்டம் நிலையாகியது.

அமரர் சிவநாதன் அகில இலங்கை புகழ் பெற்ற கரப்பந்தாட்ட கழகமான உடுவில் ஸ்ரார்ஸ் கழகத்தின் முக்கிய அங்கத்தவராக விளங்கினார். பல சைக்கிள் ஓட்டப்போட்டிகளில் பங்கு பற்றி, தினகரன் சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றி விருதுகளைப் பெற்றுள்ளார்.

ஊர்காவற்றுறை, கல்முனை நகர சபைகளிலும் யாழ்ப் பாணம், கொழும்பு மாநகர சபைகளிலும் இலிகிதராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர் இவர்.

அமரர் தம் வாழ்வில் சிறந்த சமூக தொண்டராகவும், உதவி நாடுவோருக்கு உற்சாகமாக உதவி செய்பவராகவும் திகழ்ந்து. திடீர் மறைவெய்தியமை அவரது பெற்றோருக்கு மட்டுமல்ல தமிழ் இனத்துக்கே பெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம். (உடுவில். நிரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 4-6-86

## வர்த்தகர் கைது!

வவனியாவின் பிரபல வர்த்தகரான திரு வி. மோகனசந்திரன் நேற்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். இவர் யாழ்ப்பாணம் வருவதற்காக பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோதே வவனியா தடைமுகாமில் வைத்து கைது செய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

இதனையே வவனியா வாடி வீட்டின் முன்னுலுள்ள கமநல சேவை அலுவலக ஊழியரான திரு. பத்மநாதன் என்பவரும் நேற்று இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

### அராலி - வேலணை போக்குவரத்து நெருக்கடி:

# சிரமதானம்மூலம் பாதைபோட பங்குத் தந்தை யோசனை!

[யாழ்ப்பாணம்]

அராலித் துறை நீர்ப்போக்குவரத்துக் காரணமாக தீவுப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் கஷ்டநிலைமை குறித்து ஊர்காவற்றுறை பங்குத் தந்தை வண. கிருபானந்தன் கவலை வெளியிட்டுள்ளார்.

பொதுமக்களினதும், பொது ஸ்தாபனங்களினதும் உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் சிரமதானமூலமாக அராலித் துறை நீர்வழி ஊடாக நடைபாதையொன்றை அமைக்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான பொறியியல் மற்றும் மூலப்பொருள் உதவிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வண. கிருபானந்தன் இது பற்றிக் கூறியிருப்பதாவது:

அராலித்துறைக்கும் வேலணைக்குமிடையே ஒன்றரை மைல் தூரத்தை நீர்வழியூடாகத் தற்போது கடக்க வேண்டியுள்ளது.

தினமும் இப்பயணம் காரணமாக தீவுப்பகுதி மக்கள் மேலதிக பணச்செலவு, மற்றும் நேரவிரயம் என்பவற்றுக்காளாகவேண்டியுள்ளது.

உணவுப் பண்டங்களைக்கூட சீராகவும் விரைவாகவும் எடுத்துச்செல்ல முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இந்த நீர்வழிப் போக்குவரத்துக் காரணமாக தினமும் சுமார் 20 ரூபாவரை ஒரு தீவுப்பகுதி வாசி செலவிடவேண்டியுள்ளது.

இவற்றுக்குமேலாக ஒரு நோயாளியை குறிப்பாக அவசர சிகிச்சை தேவைப்படும் ஒருவரை தீவுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரைந்து கொண்டுவரமுடியாதுள்ளது

இத்துடன் இறந்தவர்களின் சடலங்களை இப்பகுதியூடாகக் கொண்டு செல்வதும் சிரமமான காரியமாகவுள்ளது.

இந்நிலையில் பொதுமக்களும். பொதுஸ்தாபனங்களும் ஒத்துழைக்கும் பட்சத்தில் ஆழமற்ற அராலி வேலணை நீர்வழிப் பாதையை ஒரு நடைபாதையாக சிரமதானம் மூலம் மாற்றமுடியும். இதற்குத்தேவையான நிதி, மற்றும் மூலப் பொருட்களையும் யாழ் குடாநாட்டு மக்கள் அனைவரும் தீவுப்பகுதிமக்களின் நலன்கருதி வழங்க வேண்டும்'' என்று வண. கிருபானந்தன் தெரிவித்துள்ளார்.

பண்ணைப் பாலப் போக்குவரத்து ஒருமரணப் பொறியாகிவிட்டதைச் சுட்டிக் காட்டிய அவர் தீவுப்பகுதி மக்களின் நலன்கருதி அராலி வேலணைப் பாதை இணைப்புக்குழு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். [கி]

### வசாவிளான் மாணவருக்கு

# இன்றுமுதல் புதிய பாடசாலை வசதி

(யாழ்ப்பாணம்)

இராணுவ முகாமாக்கப்பட்டுள்ள வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கு புன்னாலைக்கட்டுவன் வடக்கில் உள்ள ஆயர்கடவை தமிழ்க் கலவன் வித்யாசாலையில் இன்றுமுதல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

வசாவிளான் ம. ம. வித்தியாலயத்தில் இராணுவத்தினர் முகாமிட்டது முதல் பாடசாலை இயங்காதது தெரிந்ததே. இப்பாடசாலையில் கற்று வந்த மாணவர்கள் சிலர் வேறு சில பாடசாலைகளில் ஏற்கெனவே சேர்ந்துவிட்டனராம். இராணுவமுகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் பலர் குடிபெயர்ந்து விட்டதால் இவ் வித்தியாலயத்தில் கல்விகற்ற இப்பகுதி பிள்ளைகளும் தாம் குடிபெயர்ந்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் சேர்ந்துவிட்டனர் என்றும் தெரிகிறது. (ஐ)

### இலங்கைமீது

# இந்தியா பொருளாதார தடை விதிக்கவேண்டும்

### -காமராஜ் காங்கிரஸ்

(சென்னை)

''இலங்கை இராணுவமும், பொலிசாரும் தொடர்ந்து அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருவதால் இந்தியா இலங்கைமீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும்'' என்று இந்திய மத்திய அரசுக்கு தமிழக காமராஜ் காங்கிரஸ் வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் காமராஜ் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம் மதுரையில் நடைபெற்றது. இக் கூட்டத்தின் இறுதியிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

''இலங்கைக்கு உதவிஅளித்துவரும் மற்றைய நாடுகளையும், அவ்வுதவிகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்த வேண்டும்'' என்றும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## குடும்பத்தகராறு கணவன் தற்கொலை

[ஒட்டுசுட்டான்]

கணவனுக்கும் மனைவிக்கும் குடும்பத்தகராறு ஏற்பட்டதால் கணவன் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது.

கற்சிலைமடுவைச் சேர்ந்த செ. கனகலிங்க [வயது 38] என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர். இவருக்கு நான்கு பிள்ளைகள் உண்டு.

### திருமலையில்

# வீட்டினுள் புகுந்து நகைகள் கொள்ளை

(திருகோணமலை)

திருமலைப்பகுதியைச்சேர்ந்த பாலம் போட்டாறு முந்துநகர் முஸ்லிம் குடியேற்றத் திட்டத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த ஊர்காவல் படையினர், சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்ததுடன் முஸ்லிம் பெண்மணி ஒருவரையும் மானபங்கப் படுத்தியதாகத் தெரிவிக்கப் படுகிறது

நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது

இச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணையிலீடுபட்ட கிண்ணியா பொலிசார் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஏஸாக் என்பவரைக்கைது செய்துள்ளனர். கொள்ளை அடித்த நகைகளை விலைக்கு வாங்கிய 'ரெஹயா' ஜுவலறியின் உரிமையாளர் ஒருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கிண்ணியா - குறிஞ்சாக் கேணிப்பகுதியைச் சேர்ந்த ஊர்காவல்படையினரே இச்சம்பவங்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## ஓமந்தையில் கைதானோர் விபரம்

[வவனியா]

ஓமந்தையில் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அறுவரில் நால்வர் சகோதரர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. கைதானோரின் பெயர் விபரம் வருமாறு:

த. ஞானசேகரம் (வயது 39 விளக்குவைத்த குளம்), ஆ. விஜயானந்தன் [வயது 19, சு. கமலநாதன் (வயது 25 ரம்பைக்குளம்), இவரது சகோதரர் சு ராஜேந்திரம (வயது 15, ப. செல்வராசா [வயது 30] அவரது சகோதரர் ப. உதயகுமார் வயது (23].

இவர்கள் கைதானது பற்றி வவனியா மாவட்ட பிரஜைகள் குழுச்செயலாளர் டாக்டர் வி. பரராஜசிங்கத்துக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### தி. பிரதீபன்

பிறப்பு: 29-05-64 இறப்பு; 03-06-86

திருநாவுக்கரசு பிரதீபன் அகால மரணமானார். இவர் திருநாவுக்கரசு - செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்பு மகனும். பிரபாகரன், குமுதினி. மனோரஞ்சன், நரேஷ்குமார் ஆகியோரின் அருமைச் சகோதரனும், ரெஜினு தேவசகாயத்தின் பேரனுமாவார் அன்னாரின் நல்லடக்கம் இன்று (04-06-86) 4 மணியளவில் கொஞ்சேஞ்சு மாதா சேமக்காலையில் நடைபெறும் பொருட்டு இல. 7, றக்கா ஒழுங்கையிலிருந்து எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

No. 7, றக்கா லேன். (C-2700)

### திருமதி ருக்மணி கனகரத்தினம்

திருமதி ருக்மணி கனகரத்தினம் காலமானார். அன்னார், காலஞ்சென்ற அருணசலம் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராஜபதி, பொன்னம்மாள் [ஓய்வுபெற்ற ஆசிரியை] தர்மராஜா, [ஓய்வுபெற்ற S. P] காலஞ்சென்ற யோகேஸ்வரி, காலஞ்சென்ற Dr P. கனகரத்தினம், Dr R. கனகரத்தினம் [கண் வைத்தியர்] ஆகியோரின் அன்புத்தாயாரும். காலஞ்சென்ற வோல்டர், மங்களேஸ்வரி, அருந்ததி, தனவதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் [இன்று] 4-6-86 மாலை 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: Dr. R. கனகரத்தினம்,
375/8, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(C-2690)

### அ. ச. நாகரத்தினம்-அராலி வடக்கு

பிரபல சித்த ஆயுள்வேத வைத்தியரும், சமூக சேவையாளரும், பிரபல வர்த்தகருமாகிய திரு. அ. ச. நாகரத்தினம் காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், சண்முகநாதன், சந்திரசேகரம்பிள்ளை (இருவரும் புகையிரதநிலையம் கோண்டாவில்) இராசையா விவசாயப் போதனாசிரியர், கோபாலகிருஷ்ணன், கோவீரசிங்கம், வரதநாதன், காலஞ்சென்ற திருமதி கு. தனலட்சுமி திருமதி க. பேரின்பலட்சுமி, திருமதி வி. விஜயலட்சுமி, திருமதி பா. கஜலட்சுமி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (4 - 6 - 86) பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அராலிவடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: மனைவி, மக்கள்.

(C - 2697)

## இன்று

[ஊர்காவற்றுறை]

பாராளுமன்றத்தில் நீதியுரைத்த அமரர் சரத்முத்தெட்டுவேகமவின் அஞ்சலிக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை வண. பிதா. லோறன்ஸ் அடிகளார் தலைமையில் புனித செபஸ்தியார் கோவில் முன்றிலில் நடைபெறும் (க)

## பிரதி அமைச்சர் கண்ணிவெடிக்கு பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தான் அரச பாதுகாப்பு பிரதி அமைச்சர் தீவிரவாதிகளால் வைக்கப்பட்ட கண்ணிவெடிக்குப் பலியாகியுள்ளார்.

இவருடன் ஜீப் வண்டியில் சென்ற மேலும் ஐந்து அதிகாரிகளும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [ரா]

## ரயில் பயணிகள் தொகை வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் ரயிலில் பிரயாணம் செய்வோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரியவருகிறது

கடந்தவாரம் உதயதேவி ரயிலில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்தே இவ் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

மலைநாடு, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்குச்செல்லும் ரயில்களில் பயணிகளின் தொகையே அதிகளவில் வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது. (ய-செ)

## நிலாவெளியில் மரணதண்டனை

[திருகோணமலை]

சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நிலாவெளியைச் சேர்ந்த செல்வராசா [30 வயது] என்பருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டது.

இவரின் சடலத்துக்கருகாமையில் வைக்கப்பட்டிருந்த கடிதமொன்றில் ''விடுதலை இயக்கமொன்றின் எச்சரிக்கையையும் மீறி இவர் கசிப்பு உற்பத்தி செய்து வந்தவர் என்றும், இயக்கமொன்றுடன் தொடர்பு கொண்டிருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [யா]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org